கல்வியும் எங்கள் மூலதனம்
அதில் கத்தி வைக்கிறது ஆளும் மனம் 2
பள்ளிக்கூடங்கள் அகதியானது
படிக்கும் பாடங்கள் அழுகையானது 2
அகதி முகாமில் அழுகின்ற விளக்கில் படிக்கிறோம் 2
ஆளுவோரின் கத்தி கீறக்குருதி வரும் துடிக்கிறோம் 2

கல்வியும் எங்கள் மூலதனம்
அதில் கத்தி வைக்கிறது ஆளும் மனம் 2

குப்பி விளக்குகள் காற்றில் அணைந்தன
உப்பு நீரினால் விழிகள் நனைந்தன 2
வானத்தில் விளக்கு வருமென்று நினைத்து நடக்கிறோம் 2
வாசலில் வெடிக்கும் குண்டு ஆசைகள் கருகும் துடிக்கிறோம் 2

கல்வியும் எங்கள் மூலதனம்
அதில் கத்தி வைக்கிறது ஆளும் மனம் 2

திட்டமிட்டுப்பல சதிகள் தீட்டினர்
வெட்டி வீழ்த்திட வழிகள் காட்டினர் 2
கனவுகள் கிழிந்து தரையினில் கிடந்து துடிக்குதே 2
எதிர்காலத்தின் கழுத்தை பேரினவாதம் நெரிக்குதே 2

கல்வியும் எங்கள் மூலதனம்
அதில் கத்தி வைக்கிறது ஆளும் மனம் 2

புத்தகத் தாள்கள் எதிரில் விரிந்தன
செத்தவர் முகமே அருகில் தெரிந்தன 2
போருக்கு படிப்பா படித்திட போரா கேள்விகள் 2
பதில் ஊருக்கு தெரிந்தால் இனியும் அணுகுமா தோல்விகள் 2

கல்வியும் எங்கள் மூலதனம் அதில் கத்தி வைக்கிறது ஆளும் மனம் 2